Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 5, 2023

புதன்கிழமை ஜூலை 05, 2023 | ஒளி: 09 கதிர்: 033 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE

## பலா மரம் விழுந்து 8 மாணவர்கள் பாதிப்பு

பாடசாலை வளாகத்தில் இருந்த பலா மரமொன்று முறிந்து பாடசாலை கட்டடத்தின் மீது விழுந்ததில் அக்கட்டடத்துக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதுடன், அங்கிருந்த மாணவர்களில் எட்டு மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம், கேகாலை, எத்திரியகல கனிஷ்ட வித்தியாலயத்தில் செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்றுள்ளது. நான்காம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களே காயமடைந்துள்ளனர். அவர்கள் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## திருப்பதி, திருமலை கோவில்களை இலங்கையில் அமைக்கவும்

### ரெட்டியிடம் செந்தில் தொண்டமான் வலியுறுத்து



இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஆந்திர மாநில முதலமைச்சர் ஜகன்மோகன் ரெட்டியை சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்துவது குறித்தும், கரும்பு மற்றும் மிளகாய் விவசாய, மருந்துகள் உற்பத்தி நிறுவனம் அமைப்பது குறித்தும் கலந்துரையாடல் மேற்கொண்டார்.

தொடர்ச்சி P2



## 9 மாவட்டங்களில் அனர்த்தம்; 13 ஆயிரத்து 497 பேர் பாதிப்பு

ஆ.ரமேஸ்

நாட்டின் மூன்று மாகாணங்களிலும் ஒரு மாவட்டத்திலும், கடந்த சில தினங்களாக ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால், இதுவரையிலும் 3,756 குடும்பங்களைச் சேர்ந்த 13,497 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

சப்ரகமுவ, கிழக்கு, தென் மாகாணங்கள் மற்றும் நுவரெலியா மாவட்டம் ஆகியவற்றிலேயே இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### விசேட வைத்திய நிபுணர்களின்

## தட்டுப்பாட்டால் சிகிச்சை பாதிப்பு

இம்மாதம் 30 ஆம் திகதிக்குள் சுமார் 30 விசேட வைத்திய நிபுணர்கள் ஓய்வு பெறவுள்ளதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்ற நிலையில், விசேட வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறை காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள சில வைத்தியசாலைகளில் சிகிச்சை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ரூபாயின் பெறுமதி உயர்வு; பங்குச் சந்தையும் வளர்ச்சி

இலங்கை மத்திய வங்கியால் செவ்வாய்க்கிழமை (04) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 299 ரூபாய் 87 சதமாகவும் விற்பனை விலை 314 ரூபாய் 98 சதமாகவும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 500 புள்ளிகளுக்கு மேல் அதிகரித்தது.

தொடர்ச்சி P2

## 320 ஆண்டுகள் வெளிவந்த பத்திரிகைக்கு மூடுவிழா



ஆஸ்திரியா நாட்டின் மிகவும் பிரபலமான பத்திரிகையும் உலகின் மிகப் பழைமையான செய்தித்தாளுமான 'வெய்னர் ஜெய்துங்' (Wiener Zeitung ) இனி அச்சேறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

320 ஆண்டு கால வரலாறு கொண்ட பத்திரிகையின் அச்சுப் பதிப்பின் மூடுவிழா, அந்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பத்திரிகையின் கடைசி அச்சுப் பிரதியில் வாசகர்கள் விவரம் அறிந்து கொள்ளும் விதமாக ஒரு விவரக் குறிப்பு இணைக்கப்பட்டிருந்தது. 2023 ஜூன் 29 அன்று வெளியான பத்திரிகையில் அந்தச் சுருள் இணைக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



# முன்னெடுப்புகளுக்கு சர்வதேசம் பாராட்டுகிறது

### அலிசப்ரி தெரிவிப்பு: சரிவடையுமென சிலர் எதிர்பார்ப்பதாக குற்றச்சாட்டு

நாட்டின் வங்கி கட்டமைப்பு முழுமையாக சரிவடையும் என சில தரப்புகள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாலும், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் முன்னெடுத்துவரும் திட்டங்களுக்கு சர்வதேசத்தின் பாராட்டு கிடைத்துள்ளதென வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். முதலீட்டுக்குச் சாதகமான சூழலை உருவாக்கிக்கொடுக்கும் வகையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும் பட்சத்தில், இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்கள் தயாராக இருப்பதாக குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## கதிர்காமத்தில் வழிபாடு செய்தார் ஜனாதிபதி

கதிர்காமம் வருடாந்த எசல மகா பெரஹறாவின் இறுதி நாளான திங்கட்கிழமை (03) பெரஹறாவை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கந்துல ஹஸ்தி ராஜாவின் மீது தாது கலசத்தை ஸ்தாபித்த பின்னர், இறுதி பெரஹறாவை பார்வையிட்ட ஜனாதிபதி, கதிர்காமம் சமன் தேவாலயத்துக்கும் சென்று ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

### மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க

## அரசாங்கத்துடன் இணையுங்கள்

### முழு எதிர்க்கட்சிக்கும் ஜனாதிபதி அழைப்பு

போலியான தர்க்கங்களை முன்வைத்து தோல்வியைத் தழுவிக் கொள்வதற்கு மாறாக, நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்கட்சித் தலைவர் தலைமையிலான முழு எதிர்க்கட்சிக்கும் அழைப்பு விடுத்தார்.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் எதிர்கட்சியால் முன்வைக்கப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளும் உண்மைக்குப் புறம்பானவையெனத் தெரியவந்துள்ளதால் நாட்டை முன்னேற்றும் வேலைத்திட்டத்துக்கு பங்களிப்புச் செய்த பெருமையுடன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்கான வாய்ப்பை உருவாக்கிக்கொள்ளுமாறும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

தொடர்ச்சி P2

## சபையில் இருந்தார் சமல் ராஜபக்ஷ



உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு குறித்த வாக்கெடுப்பில் பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ கலந்துகொண்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

இறையாண்மை கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானம் சனிக்கிழமை (01) பாராளுமன்றத்தில் பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ச்சி P2

## லிட்ரோ சிலிண்டர் விலைகள் குறைந்தன



12.5 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை செவ்வாய்க்கிழமை (04) நள்ளிரவு முதல் அமலாகும் வகையில் 204 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## நிலுவையை செலுத்த கால அவகாசம்

மதுபான உற்பத்தி நிறுவனங்கள் தமது வரி நிலுவையை, வழங்கப்பட்ட கால அவகாசத்துக்குள் செலுத்த தவறினால் அவற்றின் அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

முன்னணி மதுபான உற்பத்தி நிறுவனங்கள் இதுவரை 6.2 பில்லியன் ரூபாய் வரியை செலுத்த தவறியுள்ள நிலையில், இந்த நிலுவைத்தொகையை செலுத்துவதற்கு 14 நாள்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## குருந்தூர் மலை விவகாரம்: பதிலறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்தவிகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தினர் சார்பில் 02.03.2023 அன்று நீதிமன்றில் முறையீடு செய்யப்பட்ட வழக்கு, இரண்டாவது தடவையாக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## 55 ஆயிரம் தொன் உரம் வருகிறது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க, உலக உணவுத் திட்டத்திடமிருந்து இலங்கைக்கு 55 ஆயிரம் மெற்றிக்தொன் உரம் வழங்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மானியமாக பெறப்பட்ட உரத்தை அனுப்புவதற்கு கொழும்பு துறைமுகத்துக்கு நடவடிக்கை எடுக்குமாறு ரோமில் உள்ள உலக உணவுத் திட்டத்துக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு வர்த்தமானி வெளியானது

உள்நாட்டு கடன் மறுசீரமைப்புடன் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுப் படுகடன் பதிவாளருக்கு இந்த வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக அதிகாரம் வழங்கப்படுகின்றது.

அத்துடன், ஜூன் 28 ஆம் திகதியன்று இருப்பிலிருந்த பங்குகள் அல்லது பிணையங்களின் ஒரு பகுதியை மாற்றுகின்ற அல்லது பரிவர்த்தனையில் ஈடுபடுவதற்கான அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

திறைசேரி முறிகளை உருவாக்கும் போதும் வெளியிடும் போதும் ஏற்படும் ஏதேனும் செலவுகளை செலுத்துவதற்கான அதிகாரமானது,

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## திருப்பதி, திருமலை கோவில்களை இலங்கையில் அமைக்கவும்

முதலீட்டு ஊக்குவிப்பு வலய (BOI) ஆடைகள் பூங்கா குறித்தும், திருகோணமலை துறைமுகத்தில் உள்ள தொழிற்பூங்காவில் முதலீட்டாளர்களை தொழில் பூங்கா அமைக்க ஊக்குவிப்பது குறித்தும் ஆந்திர மாநில அரசிடம் செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்தார்.

திருப்பதி, திருமலை பக்தர்கள் இலங்கையில் அதிகளவில் உள்ள நிலையில், வயது மூப்பு காரணமாக திருப்பதிக்கு பயணம் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அவர்களின் வசதிக்காக இலங்கையில் திருப்பதி, திருமலை கோவில்களை அமைக்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக்கோரிக்கைக்கு சாதகமான பதிலை முதலமைச்சர் அளித்தார். இந்தச் சந்திப்பில் ஆந்திர முதலமைச்சரால், திருப்பதி பெருமாள் சுவாமி சிலை, செந்தில் தொண்டமானுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான இந்திய துணை தூதர் டொக்டர் வெங்கடேஷ் மற்றும் இலங்கை நாட்டின் அலுவலர்கள் பங்கேற்றனர்.

## 9 மாவட்டங்களில் அனர்த்தம்; 13 ஆயிரத்து 497 பேர் பாதிப்பு

சப்ரகமுவ மாகாணத்தில் நிலவும் வரட்சியான வானிலை காரணமாக 996 குடும்பங்களைச் சேர்ந்த 4,465 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாண வரட்சியால் 2,746 குடும்பங்களைச் சேர்ந்த 8,979 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென் மாகாணத்தில் மரமொன்று முறிந்து வீட்டின் மீது விழுந்தமையால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும், நுவரெலியா மாவட்டத்தில், வெள்ளம், மண்சரிவு, மரம் முறிந்து விழுதல் ஆகிய அனர்த்தங்களால் 13 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் வரட்சியான வானிலை காரணமாகவும், தென் மாகாணம் மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற வானிலை, மரங்கள் முறிந்து விழுதல் மற்றும் மண்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களினாலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தை பொறுத்தவரையில், அங்கு கடந்த சில தினங்களாக பெய்துவரும் அடைமழை, வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், விவசாய செய்கையில் ஈடுபட்டிருந்தவர்களின் விவசாய நிலயங்களும் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணங்களை விநியோகிப்பதற்கு துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலைய பணிப்பாளர் நிஹால் பண்டார தெரிவித்தார்.

## தட்டுப்பாட்டால் சிகிச்சை பாதிப்பு

பிரதான வைத்தியசாலைகளிலும் வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறை நிலவுவதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது நிலவும் வைத்தியர் பற்றாக்குறைக்கு தீர்வாக தற்போது ஓய்வு பெற்றுள்ள விசேட வைத்தியர்களை மீண்டும் பணிக்கு அமர்த்த முடியுமா என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, விசேட வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக அதிகரிப்பதற்கான அமைச்சரவை பத்திரம் இந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது அதிகரித்து வரும் வைத்தியர்களுக்கான வெற்றிடங்களை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்டுள்ளதாக அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விசேட வைத்திய நிபுணர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக அதிகரிப்பதற்கு சுகாதார அமைச்சால் கடந்த வாரம் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

## ரூபாயின் பெறுமதி உயர்வு; பங்குச் சந்தையும் வளர்ச்சி

அனைத்து பங்கு விலை குறியீடுகளும் 514.92 அலகுகள் அதிகரித்து 9,957.87 ஆக காணப்பட்டதுடன், வர்த்தகம் தொடங்கிய இரண்டு மணி நேரத்தில் மொத்த சந்தைப் புரள்வு 3.5 பில்லியன் ரூபாயாக பதிவாகியது.

அமைச்சரவை மற்றும் பாராளுமன்றம் ஆகியவை உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கு அனுமதி வழங்கியமை மற்றும் உலக வங்கியின் 700 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி உள்ளிட்ட கடந்த வார முன்னேற்றங்களுக்கு சந்தைகள் எதிர்வினையாற்றுவதாக தரகர்கள் தெரிவிக்கின்றனர்.

# முன்னெடுப்புகளுக்கு சர்வதேசம் பாராட்டுகிறது

'ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் திங்கட்கிழமை (03) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த நாள்களில் சீனாவுக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது அந்நாட்டு நிதி அமைச்சர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், சீன எக்ஸிம் வங்கியின் தலைவர் ஆகியோருடன் தான் கலந்துரையாடியிருந்தாகவும் அதன்போது அவர்கள் இலங்கையின் பொருளாதார நிலைத்தன்மைக்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு பாராட்டு தெரிவித்தனர் என்றும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அதேபோல், சைனா ஹாபர் கோபரேஷன் நிறுவனத்தின் தலைவருடனான சந்திப்பின் போது, கொழும்பு துறைமுக நகரத்தில் 1.2 டொலர் பில்லியன் முதலீடு செய்யவிருப்பதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், சீனாவின் சினோபெக் நிறுவனம் புதிய எரிபொருள் சுத்திகரிப்பு நிலையமொன்றை ஆரம்பிக்கத் தயாராக உள்ளதெனவும் தெரிவித்தார்.

அதேபோல் இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு சாதகமான முறையில் முகம்கொடுத்து சுமூகமான நிலைமைகளை உருவாக்கிக்கொண்டுள்ளதெனவும், ஜூன் 20 ஆம் திகதி வெளியான சீன புளூம் பேர்க் பத்திரிகை செய்தி வெளியிட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், "அரசாங்கத்திடம் 20 மில்லியன் அமெரிக்க டொலர் மாத்திரமே இருந்தன. அதனாலேயே நாடு வங்குரோத்து நிலைமை அடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் இலக்குகளை அடைய, கடனை குறைக்க வேண்டும். வருமானத்தில் இருந்து கடனை செலுத்தும் நிலைக்கு நாட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ய வேண்டியது அவசியமாகும். அதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களையும் மறுசீரமைக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றிலிருந்து பெற்ற கடன்களை மறுசீரமைக்க முடியாது. காரணம், மிகக் குறைந்த வட்டியில் நீண்ட கால அடிப்படையில் அவை பெறப்பட்டுள்ளன. அவர்களிடத்தில் பெறப்பட்ட கடன்களை எந்தவொரு தரப்பும் இதுவரையில் தள்ளுபடி செய்ததில்லை.

அவர்கள் கடன் தர மறுக்கும் பட்சத்தில், உலகில் வேறு எந்த தரப்பிடத்திலும் கடன் பெற முடியாது. மேலும், இந்தியா, ஜப்பான், சீனா, பாரிஸ் சமவாயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகள் எமக்கு கடன் வழங்கியுள்ளன. தற்போது, கடன் மறுசீரமைப்பு தொடர்பாக அவர்களுடன் வெற்றிகரமான விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

நாட்டின் வங்கி கட்டமைப்பு முழுமையாக சரிவடையும் என பலரும் வேடிக்கை பார்த்துக் கொண்டுள்ளனர். நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டம் சர்வதேச ரீதியில் பாராட்டைப் பெற்றுள்ளது. தேவையான சீர்திருத்தங்களைச் செய்வதற்கும் முதலீட்டாளர்களுக்குச் சாதகமான சூழலுக்கான வாய்ப்புகளை உருவாக்கும் பட்சத்தில் உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்யத் தயாராக உள்ளனர்" என்றார்.

## அரசாங்கத்துடன் இணையுங்கள்

அவசியமெனில், சபாநாயகரிடத்தில் கலந்துரையாடி எதிர்கட்சியினருக்கு மேலதிக பொறுப்புகளைப் பெற்றுக்கொடுக்க தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் அரசியல் வாழ்க்கைக்கு 32 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு ஹம்பாந்தோட்டை மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுனு மண்டபத்தில் திங்கட்கிழமை (03) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'அமரவிரு அபிமன் 32' நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது 'அமரவிரு அபிமன் 32' நினைவுச் சின்னமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கி வைக்கப்பட்டது.

மாவட்டத்தில் விவசாய மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செய்தவர்களுக்கான அன்பளிப்புகளும் புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தர பரீட்சை மற்றும் உயர்தப் பரீட்சை என்பவற்றில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களுக்கும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிறந்த விளையாட்டுத் திறன்களை வெளிப்படுத்திய மாணவர்களுக்கும் அன்பளிப்புகள் இந்நிகழ்வின்போது வழங்கி வைக்கப்பட்டன.

ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக ஹம்பாந்தோட்டை மக்கள் சார்பாக நினைவுச் சின்னமொன்றை அமைச்சர் மஹிந்த அமரவீர ஜனாதிபதிக்கு வழங்கிவைத்த அதேநேரம், ஹம்பாந்தோட்டை மக்களுக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர, ஆற்றிய சேவைகளைப் பாராட்டும் வகையில் ஜனாதிபதியால் அமைச்சருக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

## உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு வர்த்தமானி வெளியானது

தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுப் படுகடன் பதிவாளருக்கு அதிகாரமளிக்கும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பது தொடர்பான அரசாங்கத் தீர்மானம் ஒரு நாள் விவாதத்துக்கு பின்னர், 122 வாக்குகளால் பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (01) நிறைவேற்றப்பட்டது.

## சபையில் இருந்தார் சமல் ராஜபக்ஷ

இந்நிலையில், வாக்கெடுப்பின் போது, சமல் ராஜபக்ஷ சபையில் இருக்கவில்லை என ஊடகங்களால் வெளியிடப்பட்ட செய்திகள் முற்றிலும் தவறானவை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரேரணைக்கு ஆதரவாக சமல் எம்.பி வாக்களித்ததாக செயலாளர் நாயகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## லிட்ரோ சிலிண்டர் விலைகள் குறைந்தன

அந்த வகையில், 3,186 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட சிலிண்டர் 2,982 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும், 5 கிலோ கிராம் மற்றும் 2.3 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் முறையே 83 மற்றும் 37 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், 1,281 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் 1,198 ரூபாய்க்கும் 598 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 2.3 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் 567 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிலுவையை செலுத்த கால அவகாசம்

உரிய நேரத்தில் உரிய வரிகளை வசூலிக்கவில்லை என்ற தொடர்ச்சியான விமர்சனங்களால், மதுவரி திணைக்களம் நாட்டிலுள்ள சிறந்த ஒன்பது மதுபான உற்பத்தியாளர்களுக்கு 14 நாள்கள் கால அவகாசம் வழங்கியுள்ளது.

சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி, மொத்த நிலுவைத் தொகையான 6.2 பில்லியன் ரூபாயில், 2.5 பில்லியன் ரூபாய் வரி நிலுவையாகவும், எஞ்சிய 3.8 பில்லியன் ரூபாய் தாமதக் கட்டணமாகவும் கணக்கிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## குருந்தூர் மலை விவகாரம்: பதிலறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா, குருந்தூர் மலைக்குச் சென்று நிலைமைகளை கள ஆய்விற்கு உட்படுத்தியுள்ளார்.

12.06.2022 அன்று இருந்த சூழ்நிலையைப் பேண வேண்டும் என்று நீதிமன்றம் வழங்கிய கட்டளையை மீறி, அந்த இடத்தில் மேம்படுத்தல் வேலைகள் செய்யப்பட்டுள்ளதை ஆதாரத்துடன் நிரூபித்துள்ளதாக ஆதிசிவன் ஐயனார் ஆலயம் சார்பான சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

அது தொடர்பில், நீதவான் குருந்தூர் மலைப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு அங்கு நடைபெற்றுள்ள விடயங்களை குறிப்பெடுத்துள்ளார்.

இது தொடர்பாக, பதில் அறிக்கை வழங்குவதற்காக பொலிஸாருக்கும் தொல்லியல் திணைக்கத்துக்கும் திகதி வழங்கப்பட்டுள்ளது. 08.08.2023 அன்று அறிக்கையை மன்றில் தாக்கல் செய்ய திகதியிடப்பட்டுள்ளது. அறிக்கையின் பிற்பாடு அதுதொடர்பிலான கட்டளை, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றால் வழங்கப்படும் என்று சட்டத்தரணி எஸ். தனஞ்செயன் தெரிவித்துள்ளார்.

ஆதிசிவன் ஐயனார் கோவில் சார்பில், முத்த சட்டத்தரணியான கே.எஸ் ரட்ணவேல், தனஞ்செயன் மற்றும் மாவட்ட சட்டத்தரணிகள் உள்ளிட்டவர்கள் முன்னிலையானதுடன் குருந்தூர் மலைக்கு சென்றும் பார்வையிட்டு உண்மைத்தன்மையை நீதிபதியிடம் தெரிவித்துள்ளார்கள்.

## 55 ஆயிரம் தொன் உரம் வருகிறது

ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மாநாட்டால் தொடங்கப்பட்ட நன்கொடை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மரம் விழுந்து பெண் தொழிலாளி மரணம்

■ மெய்யன்

தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த பெண் தொழிலாளி, தேநீர் பருகிக்கொண்டிருந்த போது, மரமொன்று முறிந்து விழுந்தத்தில் அத்தொழிலாளி மரணமடைந்துள்ளார்.

அவ்விடத்தில் இருந்த மற்றுமொரு தொழிலாளி கால் முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்விரு பெண் தொழிலாளிகள் மட்டுமே அவ்விடத்தில் இருந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்துள்ளனர்.

இந்தச் சம்பவம், வத்தேகம, மடுகலை நெல்லிமலைத் தோட்டத்தில் செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்றுள்ளது. வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே அத்தொழிலாளி மரணமடைந்துள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தாயான, சண்முகம் விஜயலட்சுமி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அந்தப் பிரதேசத்தில் காலையில் இருந்து காற்று பலமாக வீசியதுடன், கடும் மழை பெய்துள்ளது. வெளியில் தலையைக் காட்ட முடியாத வகையில் மழை பெய்துள்ளது. நிலைமையை விளங்கிக்கொண்ட பெற்றோர், நெல்லிமலை சிவனேஸ்வரா வித்தியாலயத்துக்கு வருகைதந்து, தங்களுடைய பிள்ளைகளை இடைநடுவிலேயே வீடுகளுக்கு அழைத்துச் சென்றுவிட்டனர்.

## 320 ஆண்டுகள் வெளிவந்த பத்திரிகைக்கு மூடுவிழா

அதில் இனி 'வெய்னர் ஜெய்துங்' இணையவழியில் மட்டுமே வெளியாகும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

1703 ஒகஸ்ட் 8 முதல் 'வெய்னர் ஜெய்துங்' பத்திரிகை வெளிவந்து கொண்டிருக்கிறது. அப்போது ஆஸ்திரியாவில் ஹாப்ஸ்பர்க் அரசாட்சி நடைபெற்றது. இந்நிலையில், வரும் ஜூலை 7ஆம் திகதியுடன் 'வெய்னர் ஜெய்துங்' அச்சு அலுவலகம் மூடப்படுகிறது.

1703இல் இந்தப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது, 'Wiennerisches Diarium' என்ற பெயரில் வெளியிடப்பட்டது. பல அரசாட்சிகள், அதிபர்களைக் கண்ட இந்தப் பத்திரிகையின் கடைசிப் பிரதியின் முகப்புப் பக்கச் செய்தியில், "320 ஆண்டுகள்; 12 அதிபர்கள்; 10 பேரரசர்கள்; 2 குடியாட்சிகள்; ஒரு செய்தித்தாள்" என்று பெருமிதக் குறிப்பு இடம்பெற்றிருந்தது. இது வாசகர்களை உணர்வுபூர்வமாக நெகிழச் செய்தது.

'வெய்னர் ஜெய்துங்' பத்திரிகை ஆஸ்திரிய அரசுக்கு சொந்தமானது என்றாலும்கூட, அதன் ஆசிரியக் குழு முற்றிலும் சுதந்திரமாக இயங்கியது.

இருப்பினும், அண்மையில் ஆஸ்திரிய அரசு கொண்டுவந்த ஒரு சட்டத்தால், இப்பத்திரிகைக்கும் பொருளாதார ரீதியாக நெருக்கடி ஏற்பட்டது. இதனால் 63 பேர் கொண்ட ஆசிரியர் குழுவில் இருந்து பலரும் பணி நீக்கம் செய்யப்பட்டனர். கடைசியாக 20 பேர் மட்டுமே ஆசிரியர் குழுவில் இருந்தனர். சுவாரஸ்யமான நடையில் உள்ளூர், வெளிநாட்டுச் செய்திகள், கலாசார, வணிகச் செய்திகளை வழங்கி 'வெய்னர் ஜெய்துங்' பத்திரிகை பெயர் பெற்றது.

ஆஸ்திரிய மக்களின் மனம் கவர்ந்த இந்தப் பத்திரிகை, இனி இணையதளமாக வெளிவரவுள்ள நிலையில், மாத இதழாகப் பிரசுரிப்பது பற்றி நிறுவனம் ஆலோசித்து வருகிறது.

# பெண் மீது கார் மோதி விபத்து

செ.திவாகரன், டி.சந்ரு

வீதியோரமாக நடந்து சென்று கொண்டிருந்த பெண்ணொருவர் மீது, கார் மோதியதில் அக்கார் விபத்துக்கு உள்ளாகியுள்ளது. காயமடைந்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம், நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நுவரெலியா -தலவாக்கலை பிரதான வீதியில், வெண்டிக்கோணர் பகுதியில் செவ்வாய்க்கிழமை (04) இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து நுவரெலியா வைத்தியசாலைக்கு தொழிலுக்காக சென்றுகொண்டிருந்த வைத்தியரின் கார் சீரற்ற வானிலையால் பனிமூட்டம் நிறைந்து இருந்தமையால்



கட்டுப்பாட்டை இழந்து, வீதியோரத்தில் பயணித்த 25 வயதுடைய பெண்ணின் மீது மோதி, வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் நானுஓயா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிளிநொச்சியில் 14 குளங்கள் புனரமைக்கப்படுகின்றன

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் உலக வங்கியின் நிதி உதவியுடன் கம நல சேவை திணைக்களத்தின் கீழ் உள்ள 17 குளங்கள் புனரமைப்புக்காக தெரிவு செய்யப்பட்டு, 14 குளங்களின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் ஏனைய மூன்று குளங்களின் புனரமைப்பு பணிகளும் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில், கமநல சேவை நிலையங்களின் கீழுள்ள பல்லாய்க் குளம், சின்னக்குளம், வீரமோட்டைக் குளம், மின்னில் குளம், ஈநொச்சிமோட்டைக்குளம், இத்தாவில் குளம், சின்ன இத்தாவில் குளம், திக்குவில் குளம், குஞ்சுக்குளம், மன்னியா குளம், செம்மண்குன்றுக் குளம், தெக்கேரிக் குளம், ஓயாமாரிக் குளம், கோரமோட்டைக் குளம் ஆகிய குளங்கள் புனரமைப்பு பணிகளுக்காக தெரிவு செய்யப்பட்டு புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# கடுமையான மழையால் மதில் சரிந்து வீழ்ந்தது

ஆ.ரமேஸ், செ.திவாகரன்

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ருவான் - எலிய பகுதியில் அரசியல்வாதி ஒருவரின் இரண்டு மாடி வீட்டுக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு மதில் சரிந்து வீழ்ந்துள்ளது.

கற்களால் அமைக்கப்பட்டிருந்த இந்த மதில், திங்கட்கிழமை (03) மாலை சரிந்ததில் இவ்வீட்டின் ஓர் அறையின் சுவரும் இடிந்துள்ளது. இதனால், அவ்வறையில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் சேதமடைந்துள்ளன.

அந்த வீட்டில் வசித்தவர்கள் அவர்களுக்கு சொந்தமான மற்றுமொரு வீட்டுக்கு பாதுகாப்பு கருதி சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இறைச்சி உண்ண அனுமதி

ரி.எல் ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள ஒருவகை நோய்த்தாக்கம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதாகவும், நோய்த் தாக்கமில்லாத பகுதிகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் பரிசோதனை செய்தபின்னர், அறுவை செய்யப்படும் மாடுகளின் இறைச்சியை உண்பதற்கு அனுமதி வழங்கி உள்ளதாகவும் கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்கள மட்டக்களப்பு மாவட்ட பிரதி பணிப்பாளர் டொக்டர் திருமதி கே. உதயராணி தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்துக்குள் நோய்த் தாக்கம் ஏற்படாத பகுதிகளுக்குள் மாடுகள் மற்றும் ஆடுகளை எடுத்துச் செல்லவும் அனுமதி அளித்துள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

## வந்தாறுமூலை மகா விஷ்ணு தேவஸ்தான

# தேர் திருவிழாவும் தீமிதிப்பும் தீர்த்தோற்சவமும்

மட்டக்களப்பு, வந்தாறுமூலை ஸ்ரீ தேவி பூமிதேவி சமேத ஸ்ரீ மகா விஷ்ணு தேவஸ்தான வருடாந்த பிரமோற்சவ தேர் திருவிழா ஞாயிற்றுக்கிழமை (02) சிறப்பாக நடைபெற்றது. திங்கட்கிழமை அதிகாலை (03) தீமிதிப்புடன், களுவன்கேணி இந்து சமுத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெற்றது. பிரம்மோற்சவ பிரதம குரு சிவ ஸ்ரீ குக. அரவிந்த குருக்களின் தலைமையில் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

வ. சக்தி





# இளைஞனைக் காணவில்லை

வ. சக்தி

தாழங்குடா - 03, சமூர்த்தி வங்கி வீதியைச் சேர்ந்த நாகேஸ் டினோ என்ற 30 வயதுடைய மனநலம் பாதிக்கப்பட்ட ஆண் ஒருவரை சனிக்கிழமை (01) முதல் காணவில்லை என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து, காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும், திங்கட்கிழமை (03) அக்கரைப்பற்று பஸ் தரிப்பிடத்தில் குறிந்த நபரைக் கண்டதாக ஓட்டோ சாரதி ஒருவர் தெரிவித்துள்ள நிலையில், மனநலம் பாதிக்கப்பட்ட தனது தம்பியை யாராவது அவதானித்தால், 0750438780 என்ற அலைபேசி இலக்கத்துக்கு தெரியப்படுத்துமாறு



அவரது சகோதரி கேட்டுக்கொண்டுள்ளார்.

# நாணயம் சிக்கி குழந்தை மரணம்

இரண்டு வயது சகோதரனுடன் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த போது, தொண்டையில் நாணயம் சிக்கி இரண்டு மாதக் குழந்தை உயிரிழந்த சம்பவமொன்று தொம்பே, அஹுகம்மன பிரதேசத்தில் திங்கட்கிழமை (03) இடம்பெற்றுள்ளது.

சகோதரர்கள் இருவரும் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் மூத்த பிள்ளை தனது சகோதரியின் வாயில் நாணயத்தை திணித்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், பாதிக்கப்பட்ட குழந்தையை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்த போது மூச்சுக்குழாய் அடைப்பு காரணமாக மரணம் ஏற்பட்டதாக தடயவியல் நிபுணர், மருத்துவ அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வலையிறவு பிள்ளையார் கோவில்

# உண்டியல் உடைத்து திருட்டு

கனகராசா சரவணன்

வலையிறவு மடத்துபிள்ளையார் கோவில் உண்டியலை உடைத்து அதிலிருந்த பணத்தை திருடிச் சென்றுள்ள சம்பவம் சனிக்கிழமை (01) அதிகாலை இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கோவிலின் முன்னால் உள்ள உண்டியலை, இரும்பு கம்பியால் தாக்கி உடைத்து, அதிலிருந்த 25 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமான பணத்தை திருடிச்



சென்றுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# மதுஷிகனுக்கு 231 ஆவது படைப்பிரிவு கௌரவம்

வ. சக்தி

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவரும் ஜனாதிபதி சாரணருமான தவேந்திரன் மதுஷிகன், பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்தமையை கௌரவிக்கும் முகமாக 231 ஆவது இராணுவ படைப்பிரிவால் செவ்வாய்க்கிழமை (04) கௌரவம் அளிக்கப்பட்டது.

231 ஆவது படைப்பிரிவின் பிறிகேட் கொமாண்டர் திலீப பண்டார தலைமையில் 231 ஆவது இராணுவ படைப்பிரிவின் கல்லடி இராணுவ முகாமில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமான, மட்டக்களப்பு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், பாடுமீன் கழகத்தின் தலைவர் புஸ்பாகரன், புனித மிக்கேல் கல்லூரியின் அதிபர், மாவட்ட சாரண ஆணையாளர் வீ. பிரதீபன், மாவட்ட ஊடக பொறுப்பதிகாரி வ. ஜீவானந்தன் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அத்தோடு, குறித்த மாணவனின் சாதனையைப் பாராட்டி, பாடுமீன் கழகத்தின் தலைவர் புஸ்பாகரனால் பணப்பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# பழுகாமத்தில் நடமாடும் சேவை

ஒ. வ.சக்தி

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பரிந்துரைக்கு அமைய, சமூக சேவை திணைக்களத்தால், போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் ஆர். இராகுலநாயகியின் வழிநடத்தலின் கீழ், பழுகாமம் கலாசார மண்டபத்தில் நடமாடும் சேவை செவ்வாய்கிழமை (04) நடைபெற்றது.

இதன்போது காணி பயன்பாடு, சமூகசேவை, நோய்களுக்கான கொடுப்பனவு, விசேட தேவை உடையோருக்கான கொடுப்பனவு, 70 வயதைப் பூர்த்தி செய்தோருக்கான கொடுப்பனவு, மருத்துவ முகாம், சுதேச வைத்திய சேவை, மூக்கு கண்ணாடி வழங்கல் உள்ளிட்ட பல சேவைகளை அப்பகுதி மக்கள் பெற்றுக் கொண்டதுடன், பல அரச அலுவல்களுக்கான தீர்வுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

இச்சேவை மூலம் பழுகாமம் - 01, பழுகாமம் - 02, விபுலானந்த புரம், மாவேற்குடா, வீரஞ்சேனை, வன்னி நகர், பெரியபோரதீவு, பட்டாபுரம் உள்ளிட்ட பல கிராம சேவை அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்த 500 இற்கு மேற்பட்ட மக்கள் நன்மை அடைந்தமை குறிப்பிடத்தக்கது.



# புதிய மதுபானசாலையை உடனடியாக நிறுத்து

டி.ஷங்கீதன்

நுவரெலியா, டயகம பகுதியில் அமைக்கப்படவுள்ள புதிய மதுபானசாலையை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி, பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன், நுவரெலியா மாவட்ட செயலாளருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

மலையகத்துக்கு மதுபானசாலைகள் அல்ல; வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதற்கான புதிய திட்டமே தேவையென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மலையக பகுதிகளில் புதிய மதுபானசாலைகளை திறந்து, தொடர்ந்தும் இந்த மக்களை மயக்கத்தில் வைத்திருப்பதே அரசாங்கத்தினதும் அவர்களுக்கு துணைபோகின்ற அரசியல்வாதிகளதும் திட்டமாக இருக்கின்றது.

இந்த மக்களை பொருளாதார ரீதியாக வலுவிழக்கச் செய்வதன் மூலமாக, அவர்களின் எதிர்கால சந்ததியை தொடர்ந்தும் அடிமைத்தனமாக வைத்திருக்கவே இந்த அரசாங்கத்தினதும் அவர்களுக்கு துணைபோகின்றவர்களினதும் திட்டமாக இருக்கின்றது.

நுவரெலியா மாவட்ட டயகம பகுதியில் அமைக்கப்படவுள்ள புதிய மதுபானசாலைக்கு நாம் முழுமையான எதிர்ப்பை தெரிவிக்கின்றோம். இதனை தடுத்த நிறுத்த மாவட்ட செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# மக்களை பாதிக்கும் மதுபானசாலைக்கு அனுமதி வேண்டாம்

ஹேரியன் லெம்பட்

மன்னார் மாவட்டத்தில் நகரப்பகுதிக்குள் எந்த ஒரு மதுபான சாலைக்கும் அனுமதி வழங்க வேண்டாம் என கோரிக்கை விடுத்து செவ்வாய்கிழமை (04) மன்னார் நகர் பகுதியில் அடையாள கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பிரஜைகள் குழு, மகளிர் அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து மன்னார் நகர மத்திய பகுதியில் ஆரம்பித்த போராட்டம், நகர பகுதி ஊடாக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் வரை இடம்பெற்றது.



மன்னாரில் கத்தோலிக்க தேவாலயங்கள், இந்து கோவில்கள், பாடசாலை மற்றும் அதிக மக்கள் குடியிருப்பு அமைந்துள்ள பகுதியில் மதுபானசாலை அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

'அனுமதி வழங்கும் அதிகாரிகளே! மக்களின் அழிவுக்கு துனைபோகாதே', 'மதுபான சாலை அமைப்பதற்கான அரச சட்டத்தை அமல்படுத்து', 'பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மதுபானசாலைகள் வேண்டாம்', 'புனித பாதையில் வன்முறை ஏற்பட வழி வகுக்காதே' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், இந்து கோவில் குருக்கள், சட்டத்தரணிகள், பாராளுமன்ற - நகரசபை உறுப்பினர்கள், மெசிடோ நிறுவன ஊழியர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். போராட்டத்தின் இறுதியில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்புவதற்கான மகஜர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாற்றுத்திட்டங்கள் சாத்தியமானதாய் இருந்தல் அவசியமாகும்

ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலானவர்கள் மூவேளையும் சோறு உண்பதற்கே ஆசைப்படுவார்கள். இன்னும் சிலர், காலை, இரவு வேளைகளில் பலகாரங்களையும், பகலில் மட்டும் சோற்றையும் உண்பார்கள். நோய்நொடிகளில் இருப்போர், தங்களுக்கு ஏற்ற உணவுகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்வர். சாப்பாடு வகைகளில், மாற்றுத்தெரிவுகளை தங்களுக்கு ஏற்றவகையில் ஒவ்வொருவரும் தீட்டிக்கொள்ள முடியும்.

எனினும், தங்களால் எடுத்துக்கொள்ளப்படும் மாற்றீடு உணவுகளில் சமாந்தரமான போஷாக்கு இருக்கின்றதா என்பது முக்கியமானது. எமது நாட்டைப் பொறுத்தவரையில், பெரும்பாலான சிறுவர்கள் மந்தபோசனையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்குத் தேவையான போசாக்கான உணவுகள் குறைந்த விலையில் கிடைப்பது அரிது.

இதனால், நகர்ப்புறங்களுக்கு அப்பால் வாழும் சிறுவர்களில் பெரும்பாலானோர், ஒருவேளைகூட போசாக்கான உணவை உட்கொள்வதில்லை. அதற்கான சந்தர்ப்பங்களும் அவர்களுக்குக் குறைவாகவே இருக்கின்றது. கிடைக்கும் பொருளாதாரத்தில் தங்களுடைய பிள்ளைகளின் முழுமையான தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் பெற்றோர் திணறுகின்றனர்.

இந்நிலையில், இறைச்சி வகைகளில் எல்லா வகையான இறைச்சிகளின் விலைகளும் தலைக்கு மேல் ஏகிறி நிற்கின்றன. அவற்றைக் கொஞ்சம் தள்ளிவைத்துவிட்டு, தங்களுடைய சாப்பாடுகளில் மரக்கறிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க நினைப்போரின் தலையைத் தூக்கவிடாது, மரக்கறிகளின் விலைகள் அதற்கு ஒருபடி மேலே ஏறிநிற்கின்றன.

கோழி முட்டைக்கான தட்டுப்பாடு நிலவிக்கொண்டுதான் இருக்கின்றது. இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதாக கூறப்பட்டாலும் உள்ளூர் சந்தைகளில் பொதுவாக காணக்கிடைப்பதில்லை. சோள விளைச்சல் இன்மையால், கோழிக்கான தீவனம் குறைந்துள்ளது. முட்டைகளின் எண்ணிக்கையும் எதிர்பார்த்ததைப்போல் கிடைப்பதில்லை.

இதேவேளை, 'திரிபோஷா'வுக்கான தட்டுப்பாட்டுக்கும் உரிய தீர்வு எட்டப்படவில்லை. கர்ப்பிணிகள், குழந்தைகள், சிறுவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில்தான், 6 மாதம் முதல் 3 வயதுக்கும் இடைப்பட்ட சிறார்களுக்கு திரிபோஷவுக்குப் பதிலாக மாற்று போசனை திட்டமாக முட்டையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அரச குடும்பநல சுகாதார சேவைகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கோழிக்கும் முட்டைக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில், இந்த மாற்றுத்திட்டம் எவ்வளவுக்கு சாத்தியமானது என்பது தொடர்பில் முதலில் ஆராயவேண்டும். கோழிக்கான தீவனத்தை குறைந்த நிலையில் கோழிப்பண்ணைகளுக்கு விநியோகிப்பதன் ஊடாக, முட்டை பிரச்சினைக்கு ஓரளவுக்குத் தீர்வு காணமுடியும்.

எனினும், கர்ப்பிணிகள், குழந்தைகள், சிறுவர்கள் இருக்கும் வீட்டில் ஒருவேளையேனும் போஷாக்கான உணவுகளை உட்கொள்ள முயல வேண்டும்

முடிந்தளவு தங்களுடைய வீடுகளில் ஒரு சிறிய வீட்டுத்தோட்டத்தையாவது உருவாக்க முயல வேண்டும். சத்தான கீரைவகைகளை நாட்டுவது, ஒரிரு முட்டைக்கோழிகளை வளர்த்து, முட்டைகளை பெற்றுக்கொள்ள முயல்வது போன்ற சுயமாக நடவடிக்கை எடுத்தலே சிறந்த மாற்றீடாக அமையும். சாத்தியப்பாடுகளை இனங்கண்டுகொள்வதே அவசியமாகும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கடவுள் மாயப்பொருள் அல்ல; உண்மைப் பொருள். பாவங்களைச் செய்யும் பாவிகள், கடவுள் அதைக் கண்டுகொள்ள மாட்டார் என்று எண்ணிவிடுகின்றனர். இத்தகையவர்கள் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதேயில்லை.

இவர்களுக்கு கடவுள் ஊடாக இயற்கையும் தண்டனை வழங்கும். எந்தவொரு மனிதனும் இயற்கையின் விதிகளை மீறமுடியாது.

எதையும் சிந்திக்காது உணர்வுகளுக்கு அடிமைப்பட்டால், செய்யும் தவறுகளை உணரமுடியாது. இளமையில் இருந்தே யாவரும், தங்களைத் தாங்களே நல்வழியில் புதுப்பித்த வண்ணம் இருக்க வேண்டும். வயதில் மூத்தவர்களும்கூட, தங்களின் நிலை உணராது திணறுகின்றனர். பெற்றோரின் பொறுப்பானது, பிள்ளைகளை ஒழுக்கத்தின் ஊடாகப் பிரகாசிக்கச் செய்யவேண்டும்.

உலகில் கோடானுகோடி மக்கள் இருந்தாலும், ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறானவர்தான். எனவே, தனிநபருக்கு, தன்னை உருவாக்கும் பொறுப்பு இருக்கிறது. நல்லோர்கள் இணைந்தால் புவனம் தானாகவே மிளிரும். நற்கருமம் அழிவதில்லை.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# நாட்டை பாதுகாக்கப் போவது சேமலாப நிதியமே!



எம்.எஸ்.எம் ஐயூப்

அரசாங்கத்தின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான பிரேரணை சனிக்கிழமை (01) பாராளுமன்றத்தில் 60 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் வழங்கப்பட்டன.

இந்த விடயத்துக்கு, அரசாங்கம் எவ்வளவு முக்கியத்துவம் வழங்கியது என்றால், வரவு - செலவு திட்டம் பற்றிய விவாதம் தவிர்ந்த ஏனைய விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற விவாதங்கள், வழமையாக சனிக்கிழமைகளில் நடைபெறாத போதும், இந்த விடயம் தொடர்பாக கடந்த சனிக்கிழமை விசேட விவாதம் நடைபெற்றது.

அத்தோடு, ஜூன் 30ஆம் திகதியை அரசாங்கம் வங்கி விடுமுறையாகவும் அறிவித்தது. அதன் காரணமாக, ஜூன் 29ஆம் திகதி முதல் ஜூலை மூன்றாம் திகதி வரை வங்கிகளுக்கு தொடர்ச்சியாக விடுமுறை கிடைத்தது. அந்த ஐந்து நாள்களை உள்நாட்டு கடன் மறுசீரமைப்புப் பணிக்காக உபயோகிப்படும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஜூன் 25ஆம் திகதி அறிவித்தார்.

இந்த ஐந்து நாள்களில் வங்கிகளில் என்ன நடைபெறப்போகிறது என்று, படித்தவர்களிலும் பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது என்று, கடந்த வாரம் கூறினோம். அந்த ஐந்து நாள்கள் கழிந்த நிலையிலும், அந்தநாள்களில் என்ன நடைபெற்றது என்பது ஏறத்தாழ எவருக்கும் தெரியாது.

வழமையாக வங்கிகளிலும் அரச அலுவலகங்களிலும் உயரதிகாரிகள் சட்ட திட்டங்களின் அமலாக்கல் பற்றிய கலந்துரையாடல்களை நடத்துவதும், அவற்றில் எடுக்கப்படும் முடிவுகளை கீழ் மட்ட அதிகாரிகள் மூலமாக செயற்படுத்துவதுமே தொழிலாக செய்கிறார்கள்.

இந்த ஐந்து நாள்களிலும் ஏதாவது விசேடமாக நடைபெற்று இருந்தால், மத்திய வங்கியினதும் திறைசேரியினதும் உயர் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்துவதையே செய்திருப்பார்கள். சாதாரண நாள்களைப் போலவே அப்பேச்சுவார்த்தைகளில், வங்கிக் கிளைகளில் கடமையாற்றும் சாதாரண ஊழியர்கள் கலந்து கொள்வதில்லை. எனவே, கடந்த வெள்ளிக்கிழமை எதற்காக வங்கி விடுமுறை அறிவிக்கப்பட்டது என்பது கேள்விக்குறியாகும்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை, பாராளுமன்றத்தின் அனுமதியுடன் நடத்த வேண்டும் என்பதே, கடந்த சனிக்கிழமை நடைபெற்ற விவாதத்தின் அர்த்தமாகும். ஆனால், அதற்கு முன்னரே உள்நாட்டு கடன் மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதையே வங்கிகளுக்கான ஐந்து நாள் விடுமுறையைப் பற்றி, மத்திய வங்கி ஆளுநரின் அறிவித்தல் மூலம் தெரிகிறது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்காக அவகாசம் வழங்குவதற்காக, அந்த ஐந்து நாள்களும் உபயோகிக்கப்படும் என்றே அவர் கூறியிருந்தார். அதாவது பாராளுமன்றத்தின் அனுமதியின்றியே அம்மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டனவா?

சனிக்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்த பிரேரணையில் உள்ள விடயங்களை, வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் மத்திய வங்கி ஆளுநர் விளக்கினார். அதன்படி, "உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மூலம் வங்கி வைப்புகளுக்கோ அவற்றுக்கான வட்டிக்கோ பாதிப்பு ஏற்படாது. வங்கிகள் ஏற்கெனவே 50 சதவீதத்துக்கு மேல் வரி செலுத்திவருவதால், உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் திட்டத்திலிருந்து வங்கிகள் விடுவிக்கப்படும். ஊழியர் சேமலாப நிதியம் கொள்வனவு செய்துள்ள மத்திய வங்கி பிணைமுறிகளுக்காக ஒன்பது சதவீத வட்டி வழங்கப்படும்" என்று ஆளுநர் கூறினார்.

ஆனால், சேமலாப நிதியம் போன்ற ஒய்வூகால நிதியங்கள் கொள்வனவு செய்துள்ள திறைசேரி பிணைமுறிகள், நீண்டகால பிணைமுறிகளாக மாற்றப்படும் என்றும் அதை விரும்பாத நிதியங்கள் தற்போது செலுத்தும் விசேட சலுகை வருமான வரிக்குப் பதிலாக 30 சதவீத வருமான வரியைச் செலுத்த வேண்டும் என்றும் அவர் விவரித்தார்.

அதாவது, ஊழியர் சேமலாப நிதியம் போன்ற நிதியங்கள் தற்போது பெறும் வருமானம், இத்திட்டத்தின் கீழ் குறையப் போகிறது. அதன் மூலம் அந்நிதியங்களுக்கு சந்தா செலுத்தும் ஊழியர்கள் நட்டம் அடையப் போகிறார்கள். எனவேதான், உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் திட்டமானது, செல்வந்தர்களை பாதுகாத்து சாதாரண ஊழியர்களை குறிவைத்துள்ளது என்று எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூறுகிறார்கள்.

ஊழியர்கள் அவ்வாறு பாதிக்கப்பட்டாலும், இந்தத் திட்டத்தின் கீழ் வங்கிகளுக்கு விலக்களிக்கப்பட்டு உள்ளதால், மத்திய வங்கியிடம் பிணைமுறி கொள்வனவு செய்தவர்களும் தப்பித்துக் கொண்டுள்ளார்கள் என்றும் அதன் மூலம் பிணைமுறி ஊழலில் ஈடுபட்ட அர்ஜூன் அலோசியஸ் போன்றோர்களுக்கு சலுகை வழங்கப்பட்டு உள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி கூறியுள்ளார்.

அத்தோடு, அவர்கள் இதற்காக சர்வதேச நாணய நிதியத்தை குறை கூறுகிறார்கள். இலங்கைக்கு கடன் வழங்கும் போது, அந்நிதியம் விதித்த நிபந்தனைகளில் இந்த உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் திட்டமும் உள்ளடக்கப்பட்டு இருந்ததாகவே அவர்கள் கூறுகின்றனர்.

ஆயினும், உண்மையிலேயே சர்வதேச நாணய நிதியம் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை வலியுறுத்தவில்லை. நாணய நிதியம் வெளிநாட்டு கடன்களை மறுசீரமைக்கும் விடயத்தையே தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு மூலம், நாட்டின் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படுமா என்ற அச்சத்தையும் அந்நிதியம் தெரிவித்து இருந்தது.

கடந்த வருடம் செப்டெம்பர் மாதம், இலங்கை அரசாங்கம் நாணய நிதியத்தின் அதிகாரிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாட்டுக்கு, அந்நிதியத்தின் பணிப்பாளர் சபை கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதியே ஒப்புதல் வழங்கியது. அதையடுத்து, மார்ச் 21ஆம் திகதி நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுக்குழுத் தலைவர் பீட்டர் புறுவர் மற்றும் இலங்கைக்கான தூதுக்குழுத் தலைவர் மஷஹிரோ நொசாக்கி ஆகியோர் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தினர்.

அப்போது, வெளிநாட்டு ஊடகவியலாளர் ஒருவர், "நாணய நிதியத்தின் உதவி பெறுவதற்கான நிபந்தனைகளில் ஒன்றான, கடன் மறுசீரமைப்பில் உள்நாட்டு கடனும் அடங்குகிறதா" என்று கேட்டார். அதற்கு பதிலளித்த பீட்டர் புறுவர் "கடன் மறுசீரமைப்பு தொடர்பான இலக்குகளை எவ்வாறு அடைவது என்பது, இலங்கையின் தலைவர்கள் முடிவு செய்ய வேண்டிய விடயமாகும். அதில் உள்நாட்டுக் கடன்களை உள்ளடக்குவதா என்பதும் அந்தத் தலைவர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். இந்த விடயத்தால் பொருளாதாரத்தின் மீதோ அல்லது நிதி ஸ்திரத்தன்மையின் மீதோ ஏதாவது தாக்கம் ஏற்படுமா என்பதைப் பற்றியே நாம் கவலைப்படுகிறோம்" என்று கூறினார். நாணய நிதியம், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை வலியுறுத்தவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

ஆயினும், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்காக அரசாங்கம் அந்த வெளிநாட்டு கடன்களை வழங்கிய நாடுகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது, "நாம் வழங்கிய கடனை திருப்பித் தரும் போது, அதனை தாமதித்தோ குறைத்தோ தருவோம் என்று கூறும் நீங்கள், உங்கள் நாட்டில் உங்களுக்கு கடன் வழங்கியவர்களுக்கு மட்டும் பெற்ற கடனை முழுவதுமாகவும் தாமதமின்றியும் திருப்பிச் செலுத்துவதில் என்ன நியாயம் இருக்கிறது" என்று அவர்கள் தான் கேட்டுள்ளார்கள். அதுவும் நியாயம் தான்!

இதையடுத்தே அரசாங்கம் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு இல்லாவிட்டால், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு இல்லை. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு இல்லாவிட்டால், நாணய நிதியத்தின் உதவித் திட்டம் இல்லை. இதைத்தான் திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது கூறினார்.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பின் போது, இலங்கை தலைவர்கள் அந்தக் கடன்களை வழங்கிய நாடுகளின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி அவர்களின் இணக்கத்துடனேயே முடிவுகளை எடுக்கிறார்கள். அவர்கள் இலங்கைக்கு வழங்கிய கடனிலோ அல்லது அதற்கான வட்டியிலோ அல்லது திருப்பிச் செலுத்தும் தவணைக் காலத்திலோ எந்த மாற்றத்தையும் செய்ய முடியாது என்று கூறினால், இலங்கை அரசாங்கம் அதை எதிர்த்து எதையும் செய்ய முடியாது. ஆயினும், அவர்கள் மாற்றங்களை செய்யத் தயார் என்று கூறியதை அடுத்தே, நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை, இலங்கைக்கான உதவித் திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கியது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் போது, அரசாங்கம் தமக்கு கடன் வழங்கிய நிறுவனங்களுடன் அவ்வாறு உடன்பாடுகளைச் செய்து கொள்ளாது, தமது முடிவுகளை அவற்றின் மீது திணித்துள்ளது. அதிலும், வங்கிகள் பாதுகாக்கப்பட்டு சேபலாப நிதியம் போன்றவை மீதே பழு சுமத்தப்பட்டுள்ளது.

எனவே, திறைசேரி செயலாளரின் கூற்றை இவ்வாறு திருத்திக் கூறலாம். சேமலாப நிதியம் இல்லாவிட்டால், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு இல்லை; உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு இல்லாவிட்டால் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு இல்லை; வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு இல்லாவிட்டால், நாணய நிதியத்தின் உதவித் திட்டம் இல்லை; அந்த உதவித் திட்டம் இல்லாவிட்டால், இலங்கைக்கு எதிர்காலம் இல்லை.

## கழிதங்கள்

### நெல்லுக்கு உரிய விலையின்றி விவசாயிகள் பெரும் நட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில், அக்கராயன் குளத்தின் கீழான 1,746 ஏக்கரில் இம்முறை சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு, தற்போது அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அறுவடை செய்யும் நெல்லுக்கு, உரிய விலை இன்றியும் நெல்லை சந்தைப்படுத்த முடியாமலும், பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில், 40 சதவீதமான அறுவடை நிறைவடைந்துள்ள போதும், அறுவடை செய்யும் நெல்லை, மாவட்டத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கங்களோ அல்லது நெல் சந்தைப்படுத்தும் சபையோ இதுவரை கொள்வனவு செய்யாத நிலையில், தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களும் வர்த்தகர்களும் மிகக் குறைந்த விலையில் நெல்லை கொள்வனவு செய்து வருகின்றனர். இதனால், விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டுகின்றனர். அதாவது, நெற்செய்கை மேற்கொள்ளும்போது, உரம், களைநாசினி, கிருமிநாசினிகள் என்பவற்றை அதிகூடிய விலைகளிலேயே கொள்வனவு செய்ததாகச் சுட்டிக்காட்டுகின்றனர். உரமானியத்துக்கான வவுச்சர்கள் கூட, அறுவடை ஆரம்பித்துள்ள இக்காலத்திலேயே, வழங்கப்படுவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இம்முறை, ஏக்கருக்கு 12 முதல் 17 மூடை நெல்லே விளைச்சலாக கிடைத்ததாகவும், இதனால், தாங்கள் பெற்றுக்கொண்ட வங்கி கடன்களையோ அல்லது வங்கிகளில் அடகுவைத்த நகைகளையோ மீட்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் இம்முறை விவசாயத்தால் பாரிய நட்டத்தை எதிர்நோக்கி உள்ளதாகவும் விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றார்கள்.

யது பாஸ்கரன்



# தீராக்காதல்



திருச்செல்வம் ஜனனி
ஊடக்கற்கைகள்துறை, யாழ். பல்கலைக்கழகம்

ரோகின் வெங்கடேசன் இயக்கத்தில் லைக்கா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் சித்துகுமார் இசையமைப்பில் ஜெய், ஐஸ்வரியா, ராஜேஸ் ஷிவேதா மற்றும் அம்ஜத் நடிப்பில் கடந்த மே மாதம் 26ஆம் திகதி வெளியாகியுள்ள படம் தான் 'தீராக்காதல்'.

திருமணத்திற்கு முன்னர் காதலித்த இருவர், திருமணத்திற்கு பின்னர் சந்திப்பதன் மூலம் அவர்களது திருமண வாழ்க்கை பாதிப்படையுமா, இல்லையா என்பதே இத்திரைக்கதையாகும்.

ஜெய் (கௌதம்), ஐஸ்வரியா, ராஜேஸ் (ஆரண்யா) கல்லூரியில் படிக்கும் போது காதலித்தார்கள். பெற்றோர்களின் சம்மதம் இன்மையால் அவர்களது காதல் தோல்வியில் முடிகிறது. சுமார் எட்டு வருடங்களுக்கு பிறகு, இருவரும் தங்கள் தொழில் காரணமாக மங்களூர் என்ற ஊரில் சந்திக்க நேர்கிறது.

கௌதம் தனது மனைவி (ஷிவேதா) மகள் (ஆர்த்தி) ஆகியோரைப்பற்றிக் கூற, ஆரண்யா தனது கொடுமைக்கார கணவனான பிரகாஷ் பற்றி கருத்துகளைப் பகர்ந்துகொள்கிறாள். இவ்வாறாக தொடர் சந்திப்பின் காரணமாக, அவர்களது பழைய காதல் மீண்டும் துளிர்விட ஆரம்பிக்கிறது.

இன்னும் இவ்வாறு தொடருமானால் எதிர்காலம் பாதிப்படையும் என கௌதம் கூறி, இனி இருவரும் சந்திக்க கூடாது எனக்கூறினான். வழமை போல கௌதம் தனது குடும்ப வாழ்கையில் ஈடுபட்டு கொண்டிருக்கின்றான். ஆரண்யாவுக்கும் பிரகாஷுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையில், ஆரண்யா வீட்டை விட்டு வெளியேறுகிறாள். பின்னர், கௌதமிடம் தனது பழைய காதலைப் மீண்டும் பெறுவதற்காக அவனின் குடும்ப வாழ்கையில் குறிக்கிடுகிறாள். இறுதியில் கௌதம் தனது மனைவியுடன் இணைவானா? அல்லது முன்னாள் காதலியுடன் இணைவானா? என்பதுதான் படத்தின் மிகுதிக்கதை.

திருமணத்திற்கு பின்னர் வேறு ஒருவருடன் தொடர்பு வைப்பவர்களை, இந்த உலகம் ஏளனமாகத்தான் பார்க்கும். அந்த விடயத்தில், காட்சிகள் வசனங்கள் என்பவற்றின் மூலம் இயக்குநர் ஒரு தெளிவை ஏற்படுத்தியுள்ளார். தான் மூன்று வருடங்களாகக் காதலித்த காதலியை, ஓர் இடத்திலும் விட்டுக்கொடுக்காதவராகவும் குடும்ப வாழ்க்கையில் தனது மனைவி, மகள் தான் முக்கியம் என தனது பழைய நினைவுகளுடன் போராடும் ஒரு சிறப்பான நடிப்பை ஜெய் வெளிப்படுத்தியுள்ளார்.

ஐஸ்வரியா தனக்கு கிடைத்த குடும்ப வாழ்கையில் வரும் துன்பங்களை சகித்துகொள்ளும் ஒருவராகவும் ஜெய் மீது அளவுகடந்த காதலை உடையவராகவும் காண்பிக்கப்பட்டுள்ளார். ஜெய்யின் மனைவியான ஷிவேதா ஒரு சராசரி பெண்ணாக, மனைவிக்கு இருக்கக்கூடிய கோபதாபங்களுடன் சித்திரிக்கப்பட்டுள்ளார்.

இவர்களுடன் இணைந்து பயணம் செய்யும் ஒருவராக ஜெய்யின் நண்பனாக அப்துல் லீ (அருண்) சிறப்பாக நடித்திருக்கிறார். படத்தின் இடைவேளைக்கு பிறகு வரும் காட்சிகளில் ஆரண்யா, கௌதமின் வாழ்கையில் குறுக்கே வரும் காட்சிகளில் இரசிகர்களுக்கு விரோதி போல தோற்றம் கொடுத்தாலும், பின்னர் வரும் காட்சிகளில் ஒட்டுமொத்த மனங்களையும் அள்ளி சென்றுவிட்டார். என்றுதான் கூறவேண்டும்.




கிளைமாக்ஸில் ஆரண்யா மற்றும் கௌதம் இருவருக்கும் இடையிலான கதைவசனங்கள் அவரவருக்குரிய குணாதிசயங்களையும் புரிந்துணர்வுகளையும் யதார்த்தமாக புரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.

கௌதம் எப்பவுமே *brake up* ஆகும் போது, "அந்த லவ்பேர்ட்ஸ் தான் பிரியுறங்க; லவ் அப்பிடியேதான் இருக்கும். எவ்வளவு வயசு ஆனாலும் அவங்க அடி மனசுல ஏதோவொரு மூலையில அந்த லவ் இருந்துகிட்டேதான் இருக்கும் அந்த நினைப்போடயே இருக்கணும் ஒழிய அத தாண்டி வரணும் எண்டு நினைச்சா இங்க யாராலையும் நிம்மதியா இருக்க முடியாது ஆரண்யா" என்று கூறும் வசனம், ரசிகர்களின் மனதில் இடம்பிடித்துவிட்ட வசனமாகும்.

முற்றிலும் முதற்காதல் என்பது, என்றும் மனங்களில் தீராத ஆறாக்காதல்.






# பெண் அடிமைத்தனமும் பெண் கல்வியின் முக்கியத்துவமும்



சொக்கலிங்கம் லோகினி
இரண்டாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

பெண்ணடிமைத்தனம் என்று குறிக்கப்படுவது வரலாற்றின் பெரும் பகுதியில் பெண்கள் சமவுரிமை, வாய்ப்புகள் பெறாமல் தாழ்வுநிலையில் வாழ்ந்ததையும், அவர்களுக்கு எதிரான பல்வேறு வன்முறைகளையும், இதை ஏதுவாக்கிய சமய, சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பையும் குறிக்கிறது. சில சமூகங்களைத் தவிர பெரும்பான்மைச் சமூகங்கள் நெடுங்காலமாக ஆண் ஆதிக்க சமூகங்களாகவே இருந்து வந்துள்ளன.

அனேக சமூகங்களில் பெண்களின் மனித, உளவியல், சமூக, அரசியல், பொருளாதார மற்றும் பிற உரிமைகளும் சுதந்திரங்களும் ஆண்களுக்கு இணையாக அமையவில்லை. பல சமூகங்களில் பெண்கள் ஆண்களுக்கு பணி செய்யும் அல்லது ஆண்களின் கட்டுப்பாடுகளுக்குரிய அல்லது ஆண்களை சார்ந்து இருக்கும் மனிதர்களாகவே அடிமைத் தனமாக பயன்படுத்தப்பட்டார்கள். சுதந்திரம் அற்றவர்களாகவும், ஆண் ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டவர்களாகவும் இருக்கும் நிலையை பெண்ணடிமைத் தனம் எனலாம்.

பெண்களுக்கு சொத்துரிமை, கல்வியுரிமை, வேலையுரிமை, பேச்சுரிமை, அடிப்படை மனித உரிமைகள் இருக்கவில்லை. இதனால் பெண் சிசுக் கொலை, சிறுவர் திருமணம், சீதனம், உடன்கட்டையேறுதல், மறுமண மறுப்பு, மணவிலக்கு மறுப்பு, உடைமை மறுப்பு, கொத்தடிமையாக்கல், கோவிலுக்கு அடிமையாக்கல் என பல வழிமுறைகளில் பெண்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. தற்காலத்தில் பெண்களின் நீண்ட போராட்டத்தின் பின்பு இந்தநிலை பெரிதும் மாறிவருகின்றது.

> **பெண்கள் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியுள்ள போதிலும் அவர்களது திறமைகள் வெளியில் தெரியாத வகையில் பல விடயங்கள் புறக்கணிக்கப்பட்டன. மதம் என்ற போர்வையில் பெண்கள் நசுக்கப்பட்டார்கள். மதரீதியான நம்பிக்கைகள் பெண்களை வீட்டில் பூட்டி வைத்தன. இதனால் பெண்களின் முன்னேற்றம் பல வழிகளிலும் தடைப்பட சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன**

பெண்கள் கடல் கடந்து செல்லக் கூடாது என்ற வழக்கம் இருந்ததாக 'முந்நீர் வழக்கம் மகடூவோ டில்லை' என்று தொல்காப்பியம் குறிக்கிறது.

உலகின் மொத்த குடித்தொகையில் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்க அளவு இருந்த போதிலும் ஆரம்பக் காலச் சமூகங்களில் கல்வியறிவு அற்ற பெண்களின் பங்கு கணிசமான அளவு இருந்தது. பெண்கள் தமது குடும்ப நலனுக்காகவும் குடும்ப அங்கத்தவர்களின் திருப்திக்காகவும் தம் வாழ்க்கையை அர்ப்பணித்த நிலையைக் காண முடிந்தது.

சமூக வாழ்வின் நம்பிக்கைகளும், இறுக்கமான மரபு வழி பழக்க வழக்கங்களும் பெண்களை இத்தகைய நிலைக்கு ஆளாக்கின. பெண்களை தெய்வமாகப் போற்றிய தமிழ் மரபு தான், பெண்களுக்கு ஓர் எல்லைக்கோட்டையும் ஏற்படுத்தியது. பெண்களை தெய்வ நிலைக்கு உயர்த்தி புனிதத் தன்மை வாய்ந்த இயற்கையின் கூறுகளை ஒப்புமையாக்கியதன் விளைவு தான் பெண்களின் வளர்ச்சிக்கு ஒரு வரையறையை ஏற்படுத்தக் காரணமாக இருந்தது.

இனப்பெருக்கத்தின் செயற்பாட்டிற்கு ஆணும் பெண்ணும் சம பங்குதாரர்களாக விளங்கிய போதும், தாய்மைக்கு அணிகலன் குழந்தைப்பேறு என்பதை பெண்களுக்கு பொருத்திப் பார்த்த சமூகம், பெண்ணை மனித வள விருத்தியோடு தொடர்புபடுத்தவில்லை. குழந்தைகளை பெறுதல், வளர்த்தல், குடும்பத்திலுள்ள முதியோர்களை பேணிப் பாதுகாத்தல் போன்ற பல்வேறு வகைப்பட்ட பொறுப்புகள் பெண்களுக்கு இருந்தமையால் பெண்களின் குடும்ப, சமூக, பொருளாதார தொடர்புகள் ஆண்களை விட வேறுபட்டதாக விளங்கின.

பெண்கள் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியுள்ள போதிலும் அவர்களது திறமைகள் வெளியில் தெரியாத வகையில் பல விடயங்கள் புறக்கணிக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக மதம் என்ற போர்வையில் பெண்கள் நசுக்கப்பட்டார்கள். மதரீதியான பல நம்பிக்கைகள் பெண்களை வீட்டில் பூட்டி வைத்தன. இதனால் பெண்களின் முன்னேற்றம் பல வழிகளிலும் தடைப்பட சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன.

குறிப்பாக, பெண் கல்வி பின்னடைவதற்கு மத நம்பிக்கைகளும் பெரும் காரணமாக அமைந்தன. பெண்களை பாரபட்சமாக நடத்துவதற்கு பல சட்டங்கள் இருந்த போதிலும் அச்சட்டங்கள் தொடர்பாக பெண்களால் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. எங்கெங்கு என்னென்ன சட்டங்கள் உள்ளன என்பதைக் கூட அறியாத வகையில் பெண்கள் இருந்தார்கள்.



> **கிராமிய மக்களிடையே பெண் பிள்ளைகளின் கல்வி நிலை தொடர்பான பெற்றோர் அக்கறையின்மையை நீக்கும் போது, பெண்களின் கல்வி நிலை உயர்வடையும். பெண்களுக்கும் கல்விக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைப்பதற்காக பெண் கல்வியை துரிதப்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும்**

மனித வாழ்க்கை ஆண், பெண் என்ற இருவேறு பால்நிலை சார்ந்த உறவுகளின் இணைப்பிலேயே இயக்கம் பெற்று வந்துள்ளது. இதில் ஆண் என்பவன் முதன்மைப்படுத்தப்பட்டதால் பெண் என்பவள், அவனாலும் சமூகத்தாலும் அடக்கப்பட்டாள். இயற்கை சார்ந்தும் வாழ்ந்த பெண், ஆண் சமூகத்தில் வளர்ச்சி பெற்ற உழைப்பும், உழைப்பு பிரிவினையும், இதனால் வளர்ச்சி பெற்ற அதிகார அதிகரிப்புகளும் ஆணுக்கு சாதகமாகவே மாறியது.

ஆணின் அக்கால உடல் பலத்தால் அதிகாரத்தால் தனித்த சொத்துரிமையாக்கப்பட்டான். சமூக கூட்டு வாழ்வில் வாழ்ந்த பெண் சொத்துரிமை மறுக்கப்பட்ட நிலைக்கு உள்ளானாள். தாய் வழி சமூக அமைப்பில் பெண் முதன்மையான இடத்தை பெற்றிருந்தாள். பின்வந்த நிலவுடமை சமூகத்தில் சொத்துரிமையோடு சேர்த்து பெண்ணும் அடிமையாக்கப்பட்டாள். ஆணுக்குரிய தேவைகளை நிறைவேற்றுவதற்காக படைக்கப்பட்டவள், அவனது குறிப்பறிந்து நடக்கப் பழகிக் கொள்வதோடு பாலியல் தேவை, சந்ததி விருத்தி செய்முறை, வீட்டுப் பொறுப்புகள் என பெண்ணுக்குரிய கடமைகள் எல்லைப்படுத்தப்பட்டன. அதற்குப் பொருந்தும் வகையில் அச்சமும் நாணமும் மடமும் பயிர்ப்பும் பெண்ணுக்குரிய நான்கு குணங்களாக, படைகளாகவும் பெருமையும் அறிவும் ஆடவர்க்குரியவை என தொல்காப்பியம் வகுத்தது.

அச்சம் என்றால் பயம், தயக்கம், மடம் என்பது அறியாமை; நாணம் என்றால் வெட்கப்படுவது; பயிர்ப்பு என்றால் ஆண்கள் தொடும் போது உண்டாகும் உணர்வு; இவை பெண்ணின் நாற்குணங்களாக கூறப்பட்டன. காரணம் பாலியல் தேவைக்கு ஆணின் விருப்பத்திற்கு இசைவான பெண்ணாக இருப்பதற்கு இத்தகைய குணங்கள் தேவைப்பட்டன. அச்சம் என்ற முதல் வார்த்தையிலேயே பெண் அடிமையாக்கப்பட்டுவிட்டாள்.

'ஆண் சேறு கண்ட இடத்தில் மிதித்து தண்ணீர் கண்ட இடத்தில் கழுவிக்கொள்ளலாம்' என்றார்கள். மறுபுறத்தில், 'கல் என்றாலும் கணவன் புல்லென்றாலும் புருஷன்' என்றார்கள். ஆண் சுதந்திரமானவன்; பெண் சுதந்திரமற்றவள்; ஆண் எதை செய்தாலும் தவறில்லை; ஆனால், பெண் ஆணுக்கு எதிராகவே நான்கு குணங்களுக்கு மாறாக, எதைச் செய்தாலும் பிழை என்றார்கள். இவை அனைத்தும் பெண்ணின் உடலியல் சார்ந்த நிலையை இலக்கு வைத்தே கூறப்பட்டன.

பெண் பிறந்ததிலிருந்தே சுமையாகிறாள். பெண்ணைப் பெற்றவர்கள் அவளை ஒருவனின் கையில் ஒப்படைக்கும் வரை பெரிய பொறுப்பை தலையில் கட்டி வைத்திருப்பது போல் அவதிப்பட்டனர். இவற்றுக்கு அடிப்படையாக அமைந்தது அவளுடைய கருவளம். ஆண், பெண் இணைந்து தவறு செய்தாலும் ஆண் தப்பி விடுவான். பெண்ணின் கருத்தரிக்கும் இயல்பு அவள் தவறு செய்தவள் என வெளி உலகுக்கு காட்டிவிடும். இதனால் பெண்ணின் பெற்றோர், சகோதரர்கள், நெருங்கிய உறவுகள் என அனைவரும் ஒரு தலைப்பட்சமாக குற்றம், அவமானம், பழிச்சொல் அனைத்தையும் அனுபவிப்பார்கள். மொத்தத்தில் பெண்ணின் உடலியல் சார் நிலை, அவளைத் தங்கி வாழ்பவளாகப் பார்க்கவைத்தது. இவ்வாறான காரணங்களால் பெண் தன்னை சமூகத்திற்கு ஏற்ப இசைவாக்கிக் கொண்டாள்.

தற்போதைய காலத்தில் பெண் அடிமைத்தனம் என்பது சற்று குறைந்து காணப்பட்டாலும், சாதி, மதம், இனம் என்பவற்றின் ரீதியாக, பெண் அடிமைத்தனம் இன்றும் நடந்து கொண்டேத்தான் இருக்கின்றது. இந்தப் பெண் அடிமைத்தனத்தை முற்றிலும் அழிக்க வேண்டும் என்ற நோக்கில் ஒவ்வொரு சமூகத்திலுமுள்ள மனிதர் என்ற ரீதியில், நாமும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். பெண் அடிமைத்தனத்தை இல்லாதொழித்து, பெண்களுக்கான முழு சுதந்திரத்தையும் கொடுத்து, 'ஆணுக்கு நிகரானவள் பெண்' என்ற சமூக உரிமையை வழங்கி, பெண்களைப் போற்ற வேண்டும்.

முன்னைய காலத்திலேயே பெண் அடிமைத்தனம் அதிகளவாக காணப்பட்டது. ஆனால், தற்காலத்தில் பெண்கள் சுதந்திரமாக வெளியுலகுக்கு வந்து, சகல துறைகளிலும் தன் சாதனைகளைச் சாதிப்பவர்களாகவும் வெளிக்காட்டக் கூடியவர்களாகவும் சுதந்திரத்துடன் திகழ்ந்து வருகின்றனர். அந்த வகையில் பெண்களின் இந்த முன்னேற்றத்திற்கு கல்வியின் முக்கியத்துவம் மிகப்பெரிய வெற்றியாக அமைந்துள்ளது.

## பெண் கல்வியின் முக்கியத்துவம்

ஒரு சமூகத்தில் ஆண்கள் கல்வி கற்பதற்கு எத்தகைய வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவோ அவற்றுக்கு நிகராக பெண்களுக்கும் கல்வி கற்பதற்குரிய அனைத்து வாய்ப்புகளும் எதுவித பாரபட்சங்களுமின்றி வழங்கப்பட வேண்டும். இதனை பெண்கள் எதுவித தடையுமின்றி பெறும் நிலையே கல்வியின் சமத்துவம் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. ஒரு சமூக அமைப்பிலே பல்வேறு வகைப்பட்ட வாழ்க்கை வசதிகளையும் சமூக அந்தஸ்தையும் உடைய பல பெண்கள் வாழ்கின்றார்கள்.

அதேவேளையில் தமது அன்றாட வாழ்வாதாரத்துக்காகப் பாடுபடும் பெண்களும் சமூகத்தில் வாழ்கின்றார்கள். இவர்களில் சிலர் எதுவிதமான கல்வியறிவும் அற்றவர்களாக காணப்படுகின்றார்கள். இவர்கள் கல்வியறிவு பெறும்போது குடும்பத்தின் சுகாதாரம், பாதுகாப்பு போன்றவைகள் ஓரளவு உறுதிப்படுத்தப்படுகின்றன. கல்வி அறிவு பெற்ற பெண்களின் சமூகப் பங்களிப்பு சமூக வளர்ச்சிக்கு ஒரு காரணியாகவும் அமைகின்றது. கல்வி அறிவு பெற்ற பெண், மனித வளத்தின் நேரிடையான பங்களிப்பு குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நன்மை விளைவிக்கும்.

மனித வளத்தை விருத்தி செய்ய வேண்டுமானால் பெண்கள் கல்வியறிவு பெற வேண்டும். அண்மைய காலங்களில் பெண்கள் பல துறைகளிலும் சம உரிமையுடன் கல்வி கற்று வருகின்றனர். இதனை சமூகம், அறிவு ரீதியாக உணர்ந்து செயற்படத் தொடங்கியுள்ளது. இன்றைய சமூகத்தின் அதி தீவிரமான அறிவுத்தேடல், பொருள் நோக்கிய சிந்தனை போன்றவைகளின் காரணமாக ஆண், பெண், சிறுவர்கள் என்ற பேதமின்றி யாவரும் கற்பதற்கும் உழைப்பதற்கும் உரியவர்கள் என்ற சிந்தனை மேலோங்கி வருகின்றது. குடும்பத்தின் வளர்ச்சியிலும், கல்வியிலும் அதிக கவனம் கொண்டவர்களாகக் கூடிய பொறுப்புணர்ச்சியுடன் பெண்கள் செயற்படுகின்றனர். தொழில் புரியும் பெண்கள் தொடர்பான தவறான எண்ணங்கள், சிந்தனைகள் மாற்றப்பட்டு வருகின்ற போதிலும் சில சமூகங்களில் இத்தகைய முன்னேற்றகரமான சிந்தனைகள் சரியாக அங்கிகரிக்கப்பட முடியாத நிலையும் உண்டு.

அந்தவகையில், பெண் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் அதன் மூலம் ஏற்படும் சமூக, பொருளாதார, வளர்ச்சி போன்றவைகள் தொடர்பான சமூக ஆதரவை திரட்டும் நோக்கத்துடன் கல்வி நிறுவனங்களும் அரசாங்கங்களும் செயற்பட வேண்டும். கிராமிய மக்களிடையே பெண் பிள்ளைகளின் கல்வி நிலை தொடர்பான பெற்றோர் அக்கறையின்மையை நீக்கும் போது, பெண்களின் கல்வி நிலை உயர்வடையும். பெண்களுக்கும் கல்விக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைப்பதற்காக பெண் கல்வியை துரிதப்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். பெண்களை கல்வியில் மாத்திரமின்றி பல துறைகளிலும் அவர்களை அடிமைப்படுத்தாமல் அவர்களுக்கான சம உரிமை, சுதந்திரம், பாதுகாப்பு என்பவற்றை வழங்கி அவர்களையும் மதித்து போற்ற வேண்டும்.

காபூல்

# பெண்கள் அழகு நிலையங்களுக்கு தலிபான் தடை



ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி நடைபெற்று வருகிறது. தலிபான் அரசாங்கம் பெண்களுக்கு எதிராக பல தடைகளை விதித்துள்ளது. பாடசாலைகள், கல்லூரிகளுக்கு பெண்கள் செல்ல தடைவிதித்தது. அதன்பின் என்.ஜி.ஓவில் பணிபுரிய தடைவித்தது. பூங்கா, சினிமா, பொழுபோக்கு இடங்களில் வேலை செய்ய தடைவித்தது.

அந்த வரிசையில் தற்போது காபூல் மற்றும் நாட்டில் உள்ள மற்ற மாகாணங்களில் பெண்கள் அழகு நிலையங்களுக்கு (பியூட்டி பார்லர்) தடைவிதித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. காபூல் நகராட்சிக்கு நல்லொழுக்க அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர், தலிபான்களின் புதிய உத்தரவை நடைமுறைப்படுத்தி, பெண்கள் அழகு நிலையங்களில் உரிமத்தை ரத்து செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ளார். இதனால் பெண்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து பெண்கள் உரிமை பறிக்கப்பட்டு வரும் நிலையில் தற்போது இதுவும் ஒன்றாகிறது. ஆப்கானிஸ்தான் சிறுமிகள் மற்றும் பெண்கள் மீது தலிபான்கள் விதித்துள்ள கட்டுப்பாடுகள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் எதிர்வினைகளைத் தூண்டியுள்ளன.

வொஷிங்டன்

## சீனா செல்லவேண்டாம்

சீனாவுக்கு பயணம் செய்வதை தவிர்க்குமாறு அமெரிக்கர்களுக்கு அந்நாட்டு அரசு வலியுறுத்தி உள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்கா வெளியுறவுத்துறை வெளியிட்ட பயண ஆலோசனையில், தவறான தடுப்பு காவலில் வைக்கப்படும் அபாயம் இருப்பதால் அமெரிக்கர்கள் சீனாவுக்கான பயணத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா-சீனா இடையே மோதல் போக்கு இருந்து வருகிறது. இந்த நிலையில்தான் சீன பயணத்தை தவிர்க்குமாறு அமெரிக்க அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

திரிபோலி

## கடாபியின் மகன் உண்ணாவிரதம்



ஆப்பிரிக்க நாடான லிபியாவில் 1969 முதல் 2011ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக இருந்த முஹமது கடாபி சர்வாதிகாரியாக செயற்பட்டார். பின்னர் இவருக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்து, சொந்த ஊரான சிர்டேவில் புரட்சியாளர்களால் சுட்டு கொல்லப்பட்டார். இதனையடுத்து சிரியா-லெபனான் எல்லையில் பிடிபட்ட அவரது மகன் ஹன்னிவால் லெபனான் சிறையில் அடைக்கப்பட்டார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முஹமது கடாபியின் மகன் ஹன்னிவால் சிறையிலேயே உண்ணாவிரதம் இருந்து வருகிறார். இந்தநிலையில் அவருக்கு ரத்தத்தில் சர்க்கரை அளவு குறைந்து உடல்நலம் பாதிக்கப்பட்டது. இதனையடுத்து ஹன்னிவாலை மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். கவலைக்கிடமாக உள்ள அவருக்கு அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஸ்லாமாபாத்

## கடன் வாங்கும் பட்டியலில் 4 ஆவது இடத்தில் பாகிஸ்தான்

பாகிஸ்தான் தற்போது வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியில் சிக்கி உள்ளது. இதனால் அங்கு பணவீக்கம், விலை உயர்வு போன்றவற்றால் ஏழைகள் மிகுந்த அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இதனை சமாளிப்பதற்காக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றிடம் கடன்களை வாங்கி வருகிறது. அதன்படி கடந்த மார்ச் மாத நிலைவரப்படி சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கிய நாடுகளின் பட்டியலில் 5வது இடத்தில் பாகிஸ்தான் உள்ளது. சுமார் ரூ.3 லட்சம் கோடியுடன் அர்ஜென்டினா இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

இந்தநிலையில் அமெரிக்காவை தலைமையிடமாக கொண்ட சர்வதேச நாணய நிதியத்திடம் மேலும் 3 பில்லியன் டொலர் (சுமார் ரூ.24 ஆயிரம் கோடி) கடன் வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் கையெழுத்திட்டு உள்ளது.

அமெரிக்கா

## துப்பாக்கி சூட்டில் நால்வர் படுகொலை

அமெரிக்காவின் பென்ஸில்வேனியா மாநிலத்தின் பெரிய நகரம் பிலடெல்பியா. அங்கு நடந்த ஒரு துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது 4 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலர் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என கூறியுள்ள பிலடெல்பியா பொலிஸார், பாதிக்கப்பட்டவர்கள் குறித்த அடையாளங்களோ அல்லது வேறு கூடுதல் விவரங்களோ எதுவும் வெளியிடவில்லை.

உள்ளூர் நேரப்படி, திங்கட்கிழமை (03) இரவு 08:30 மணியளவில் பிலடெல்பியாவின் கிங்ஸெஸிங் சுற்றுவட்டாரத்தில் உள்ள வாரிங்டன் அவென்யூவில் உள்ள 5700-வது பிளாக்கில் துப்பாக்கிச் சூடு நடந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உத்தரபிரதேசம்

## ஓடும் பஸ்ஸில் நடத்துநர் உடலுறவு

உத்தர பிரதேச மாநிலம் ஹத்ராஸில் இருந்து லக்னோ சென்று கொண்டிருந்த பஸ்ஸில், இளம் பெண்ணுடன் பஸ்ஸின் நடத்துநர் உடலுறவு கொண்டதாக கூறப்படுகிறது. இதை நீண்ட நேரம் கவனித்துக்கொண்டிருந்த பயணி ஒருவர், இந்தச் சம்பவத்தை வீடியோவாக எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளார்.

அந்த வீடியோவில் பயணி ஒருவர் நடத்துநரிடம் ஆசனம் கேட்பது போல வீடியோ எடுக்கிறார். அவர் வீடியோ எடுப்பதை அறிந்து கொண்ட நடத்துநர், அந்தப் பயணியிடம் இருந்து அலைபேசியை பிடுங்க முயல்கின்றார். இதை கண்ட மற்ற பயணிகளும் இந்தச் சம்பவத்தை வீடியோ எடுக்க தொடங்கியுள்ளனர்.

பயணி தொடர்ந்து வீடியோ எடுத்த நிலையில் அவர்கள் இருவரும் போர்வைக்குள் மறைந்து கொண்டு ஆடைகளை எடுத்து மாட்டிக் கொள்ளும் காட்சிகளும் அதில் பதிவாகியுள்ளன.

மகேந்திரநகர்

## வெயில் காலத்தில் வெப்பத்தை உணராத அதிசய மனிதர்

கடந்த சில மாதங்களாக வெயில் 45 டிகிரியை தாண்டி கொளுத்தி வரும் நிலையில், ஒருவர் மட்டும் ஸ்வெட்டர், குல்லாவுடன் வாழ்ந்து வந்தால் எப்படி இருக்கும் என்று நினைத்து பாருங்கள்.

ஆம், உண்மைதான்! வெயிலை சமாளிக்க நாம் எல்லோரும் மின்விசிறிகள், ஏசி மற்றும் ஏர் கூலர்களை பயன்படுத்தி வருகையில், விதிவிலக்காக ஒருவர் மாறி வாழுகிறார். மகேந்திர நகரில் வசிக்கும் சந்த்லால் என்பவர்தான் இப்படி வினோதமான வாழ்க்கை முறையை பின்பற்றி வருகிறார்.

இவர் 45 டிகிரி வெயிலிலும் மூன்று அடுக்கு கொண்ட ஸ்வெட்டரையும், தலைக்கு அடர்த்தியான குல்லாவையும் போட்டுக் கொள்கிறார். வெயில் காலத்தின் பகல் மற்றும் இரவு என எல்லா நேரங்களிலும் ஸ்வெட்டரை இவர் அணிந்து கொள்கிறார். மேலும், அவரது காதுகளை மூடிக்கொள்ள கதகதப்பான தொப்பி மற்றும் சால்வை அணிந்து கொள்கிறார். இதில் இன்னோர் ஆச்சரியம் என்னவென்றால், இவருக்கு இவ்வளவு வெயிலும் கொப்புளங்களோ வியர்வையோ வரவில்லை.

மருத்துவர்கள் கூட திகைத்து போயுள்ளார்கள். எப்படி இவ்வளவு வெப்பத்தையும் இவரால் தாங்கி கொள்ள முடிகிறது என்பதே அனைவரின் கேள்வியாக உள்ளது. இது மட்டுமல்லாது, இவர் கோடை காலத்திலும் குளிர் போன்ற உணர்வை உணர்வதாகவும் கூறியுள்ளார்.



# உலகக் கிண்ணத்தில் இலங்கை

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடருக்கு இலங்கை தகுதி பெற்றுள்ளது.

புலவாயோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிம்பாப்வேயுடனான சுப்பர் சிக்ஸ் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே உலகக் கிண்ணத்துக்கு இலங்கை தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட சிம்பாப்வே, டில்ஷான் மதுஷங்க (3), அணித்தலைவர் தசுன் ஷானக, மகேஷ் தீக்ஷன (4), மதீஷ பத்திரணவிடம் (2) குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 32.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், ஷோன் வில்லியம்ஸ் 56 (57) ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 169 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, பதும் நிஸங்கவின் ஆட்டமிழக்காத 101 (102) ஓட்டங்களோடு 33.1 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மகேஷ் தீக்ஷன தெரிவானார்.



### இரண்டாவது ஆஷஸ் டெஸ்டிலும்

## இங்கிலாந்தை வென்ற அவுஸ்திரேலியா

இங்கிலாந்துக்கெதிரான ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில், முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்றிருந்த அவுஸ்திரேலியா, லோர்ட்ஸில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியிலும் வென்று 2-0 என முன்னிலை பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

அவுஸ்திரேலியா: 416/10 (துடுப்பாட்டம்: ஸ்டீவன் ஸ்மித் 110, ட்ரெவிஸ் ஹெட் 77, டேவிட் வோர்னர் 66, மர்னுஸ் லபுஷைன் 47 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஷ் டொங்க் 3/98, ஒலி றொபின்ஸன் 3/100, ஜோ றூட் 2/19, ஜேம்ஸ் அன்டர்சன் 1/53, ஸ்டூவர்ட் ப்ரோட் 1/99)

இங்கிலாந்து: 325/10 (துடுப்பாட்டம்: பென் டக்கெட் 98, ஹரி ப்ரூக் 50, ஸக் குறொலி 48, ஒலி போப் 42 ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 3/88, ட்ரெவிஸ் ஹெட் 2/17, ஜொஷ் ஹேசில்வூட் 2/71, நேதன் லையன் 1/35, பற் கமின்ஸ் 1/46, கமறொன் கிறீன் 1/54)

அவுஸ்திரேலியா: 279/10 (துடுப்பாட்டம்: உஸ்மான் கவாஜா 77 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஸ்டூவர்ட் ப்ரோட் 4/65, ஒலி றொபின்ஸன் 2/48, ஜொஷ் டொங்க் 2/53, பென் ஸ்டோக்ஸ் 1/26, ஜேம்ஸ் அன்டர்சன் 1/64)

இங்கிலாந்து: 327/10 (துடுப்பாட்டம்: பென் ஸ்டோக்ஸ் 155, பென் டக்கெட் 83 ஓட்டங்கள். பந்துவீச்சு: பற் கமின்ஸ் 3/69, மிற்செல் ஸ்டார்க் 3/79, ஜொஷ் ஹேசில்வூட் 3/80)

போட்டியின் நாயகன்: ஸ்டீவன் ஸ்மித்

## ரொனால்டோவுடன் இணையும் டி கியா?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் கோல் காப்பாளரான டேவிட் டி கியாவை சவுதி அரேபியக் கழகமான அல் நஸார் இலக்கு வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

யுனைட்டெட்டுடனான 32 வயதான டி கியாவின் யுனைட்டெட்டுடனான ஒப்பந்தமானது தற்போது முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த பருவகாலத்தில் டி கியாவின் முன்னாள் சக வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ அல்-நஸாரில் இணைந்தமை குறிப்பிடத்தக்கது.



### இளைஞர்கள் சபை வெற்றிக் கிண்ணத் தொடர்:

## சம்பியனானது பாலமுனை அரபா விளையாட்டு கழகம்

நூருல் ஹுதா உமர்

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இளைஞர்கள் சபை வெற்றிக் கிண்ணத் தொடரில் பாலமுனை அரபா விளையாட்டுக் கழகம் சம்பியனானது. பாலமுனை பொதுமைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஒலுவில் லெவிண் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தை வென்றே அரபா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அரபா விளையாட்டுக் கழகம் ஐந்து ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 66 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய லெவிண் ஸ்டார் ஐந்து ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 64 ஓட்டங்களையே பெற்று ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந்தது.

சம்பியனான அரபா விளையாட்டுக் கழகத்துக்கு 30,000 ரூபாய் பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டதுடன், இரண்டாமிடத்தைப் பெற்ற லெவிண் ஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்கு 15,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

### அவுஸ்திரேலிய குரான் பிறீ:

## வென்ற வெர்ஸ்டப்பன்

அவுஸ்திரேலிய குரான் பிறீயானது நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில் றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் வென்றார்.

இரண்டாமிடத்தை பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க் பெற்றதோடு, மூன்றாமிடத்தை நெதர்லாந்தின் வெர்ஸ்டப்பனின் சக றெட் புல் அணியின் சேர்ஜியோ பெரேஸ் பெற்றார்.

அந்தவகையில் இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 229 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியனான வெர்ஸ்டப்பன் காணப்படுகின்றார். 148 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ,மெக்ஸிக்கோவின் பெரேஸ் காணப்படுவதுடன், மூன்றாமிடத்தில் 131 புள்ளிகளுடன் பெர்ணாண்டோ அலோன்ஸோ காணப்படுகின்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 05 ஜூலை 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.